# உலக தமிழோசை
ULAKA THAMILOSZAI

11வது ஆண்டில்

விளம்பரம்
VLAMBARAM™

416-282-8059
416-282-4978

சமூக முன்னேற்றப்பத்திரிகை மாதமிருமுறை இலவசம்

நதி 11 | OCTOBER 01, 2001 | பாலம் 19



- வியாபாரம் தொடங்குபவர்களிற்கு....(பக்கம் 13)
- ரென்னிஸ் ஆட்டத்தில் ஒரு சரித்திரம் (பக்கம் 06)
- TWIN TOWERS முற்றாக அழிந்தது - ஓர் ஆய்வு (பக்கம் 02)
- மொட்டையர்களும் சடையர்களும்... (பக்கம் 12)
- எல்லோரும் வீடுவாங்க தகுதியுள்ளவர்களா? (பக்கம் 19)
- அவனும் நோக்க, அவளும் நோக்கினாள் (பக்கம் 09)
- தூறலில் அப்பா பாஸ் ? (பக்கம் 08)
- ஏழு புள்ளிகளை இழப்பதை தவிர்க்கும் சாரதிகள் (பக்கம் 04)
- பஞ்ச பூதங்களும் அவசியமா? (பக்கம் 05)





RE/MAX
Crossroads Realty Inc.

வீடு விற்க வாங்க
பூரண ஆலோசனை
பெற நாடவேண்டியவர்

Raja M. Mahendran, P.Eng.
Sales Representative

MEMBER OF RE/MAX HALL OF FAME
Office: (416) 491-4002
Pager (416) 589-4270
MEMBER OF RE/MAX PLATINUM CLUB


## அருள் விருந்து

*-செ. சிவசுப்பிரமணியம்*

- கடவுளின் பெரிய திட்டம் எல்லா உயிர்கள் மீதும் நிகழ்ந்து வருகிறது.
- செயற்கரிய செயலைத் துவக்கி வைப்பது. நல்லறிவு. அதை நிறைவேற்றி வைப்பது இடையறாத பேருழைப்பு.
- மனதுக்கு ஆற்றல் மிக உண்டு. சொர்க்கத்தை நரகமாக்கவும், நரகத்தை சொர்க்கமாக்கவும் வல்லது அது.
- பண்டைப் பொருள்களில் எல்லாம் பண்டையது பரம் பொருள். ஏனென்றால் அது எப்பொழுதும் இருக்கிறது.
- அழகியிவைகளுள் மிக அழகு வாய்ந்தது இயற்கை. ஏனென்றால் அது இறைவனது சிருஷ்: இறைவனது சொரூபம்.

## உன்னை அறிந்தால்

தேவைகள் ஏற்படும் போதுதான் ஒன்றின் பெருமை விளங்கும். பல்குத்தும் போதுதான் சிறுதுரும்பின் அருமை தெரிகிறது. அவையோ அளவிற்கு அதிகமாக இருந்தாலும் தேவைக்கு தகுந்தாற்போல் பாவிக்கலாம். சில செயல்கள் அவற்றின் பெருமைகள் அந்த சந்தர்ப்பத்தில்தான் அதற்குப் பெருமை கொடுக்கலாம். அல்லது மதிப்புக் கொடுக்கலாம். இல்லாவிட்டால் அதன் மதிப்பு குறைந்துவிடும். உதாரணமாக நல்லதொரு உதைபந்தாட்டப் போட்டி நடைபெறுகின்றது என்றால் அந்தப்போட்டி நடைபெறும் போதுதான், அதனைப் பார்த்து இரசிப்பதில் ஒரு மகிழ்ச்சியும் உத்வேகமும் இருக்கும். அந்தப் போட்டி முடிந்த பிறகு அதன் முடிவும் தெரிந்தபிற்பாடு அந்தப் போட்டியில் உண்மையான மகிழ்ச்சியும் உணர்ச்சி பூர்வமான உத்வேகமும் இருக்காது.

இது வாழ்வின் உண்மை. ஏற்கவேண்டியுள்ளது. ஒவ்வொரு செயல்களிற்கும் ஒரு சக்தி விரயமாகின்றது. அந்த சக்திக்குரிய பெறுமானம் கிடைக்காவிட்டால் அந்த சக்தி அநியாயமாக்கப்பட்டதாகவே கருதவேண்டும். இவை வானொலியாகவும் (Radio) தொலைக்காட்சியாகவும் (TV) இருந்தாலும் பொருந்தும். கஸ்டப்பட்டு, பலர் தங்கள் நேரங்களை செலவழித்து உருவாக்கும் சிறந்த நிகழ்வுகள் ஆகக் கூடிய மக்களைச் சென்றடைந்தால் தான் அதற்குரிய பூரண வெற்றி பெற்றதாகக் கருதலாம்.

*நல்லதையே சிந்திப்போம். நல்லதையே செய்வோம். நாளை நமதே!*

*-நெற்றிக்கண்ணன்*


இழந்த தலைமுடியை மீண்டும் பெற
வாருங்கள் சபோனாவிற்கு!

SABONA
& Gift

☎: (416) 264-8787 ☎: (416) 269-8151
2602 Eglinton Ave.E.
Toronto, Ont.,M1K 2R9
www.sabona.ca
www.tamilclub.com/sabona


*கப்பலின் ஆரம்பம் ஒரு பலகை; கூரையின் ஆரம்பம் ஒரு கல்; இளவரசியின் ஆட்சிக்கு ஆரம்பம் வருக என ஒரு நல்வாழ்த்து. உடல் நலத்தின் ஆரம்பம் உறக்கம்.*

*ஐரிஷ் பழமொழி*


Singapore Communication

- $25.00
- 100 + 50 bonus Min Free
- Fri: 6p.m. - 8a.m. Free
- C/F C/W Free - Messaging Pack &
- Call ID Free For (3) Months
- Free Gift Available in Store

416 - 740 - 5292
416 - 745 - 2378 (Sathi/Raj)
Hot Line: 416 - 866 - 9700



சிவாகம கிரியா பீடம்
☎: (416) 724-7480

திருமணம், பதிவுத்திருமணம், பூப்பு நீராட்டு விழா, புண்யாக வாசனம், வீடு குடி புகுதல், திருமணம் விஷேச தனபாக்கிய பூஜை, கடை திறப்பு, லக்சுமி பூஜை, சிரார்த்த மஹாளயாதி பிதிர் பூஜை மற்றும் ஜோதிஷம் பார்த்தல், ஜனன ஜாதகம் எழுதுதல், விவாகப் பொருத்தம் பார்த்தல், மஹாகணபதி ஹோமம், ஆயுஷ்ய ஹோமம், தாரதோஷ மாங்கல்ய தோஷ நிவர்த்தி ஹோமம் மற்றும் முத்து மணவறை, தலைஅலங்கார ஜோடனை, ஜடை நாகம், ஆண்டாள் மாலை, தலைப்பாகை, பரத நாட்டிய அலங்கார ஆபரணங்கள் மற்றும் கல்யாண மண்டபம் போன்ற உங்கள் தேவைகளுக்கு அணுகுங்கள். சிவஸ்ரீ ச. கு. ஸ்ரீதரக்குருக்கள் (கண்ணன் குருக்கள்) திருமணப் பதிவாளர் / நிர்வாகி சிவாகம கிரியா பீடம்
5 Greenleaf Terr., Scarborough, Ont.

துரித பணமாற்றுச் சேவை



வவுனியா - கொழும்புச்
சுற்றுப் புறங்களுக்கும் -
சிங்கப்பூர் - சென்னை ஆகிய
இடங்களுக்கும் கடுகதியில்
பணம் அனுப்புவதற்கு
மு. காசிப்பிள்ளை & சன்ஸ்
☎ (416) 267-8221

Insurance & Financial Services
Balan Kanapathi (Agent)



- Auto
- Home
- R.R.S.P
- Life
- Disability
- Mutual Fund
- Group Insurance
- Child Education
- Travel
- Business

London Life
LIBERTY MUTUAL

416 291-0451 EXT. 286 / 905 294 2429 / 416 452 6975
10 MILNER BUSINESS COURT, SUIT 900, SCARBOROUGH



VLAMBARAM, P.O. BOX 37527, 31 TAPSCOTT RD.
TORONTO, ONT. M1B 5P9, CANADA

TEL: (416) 282-8059
FAX: (416) 282-4978
e-mail: vlambaram@email.com




# அறிவும் ஆக்கமும் (89)

-விஜே குலத்துங்கம்

செப்ரெம்பர் 11 ஆம் திகதி நியூயோர்க் நகரிலுள்ள World Trade Centre இடிந்து விழுந்து நொறுங்கியது. இரட்டைக் கோபுரங்களைக் கொண்ட இந்தக் கட்டிடம் 6.5 ஹெக்டயர் நிலப்பரப்பில் 1965 ஆம் ஆண்டு கட்ட ஆரம்பிக்கப்பட்டு 1972 ஆம் ஆண்டு கட்டி முடிக்கப்பட்டது. அந்தக் கால கட்டத்தில் இதன் உயரத்தையும், அளவையும் கொண்டு பலர் இதனை எதிர்த்தார்கள். 60 களில் பிரபல்யமான ஒரு விமர்சகர் இதனை வானளாவிய கட்டிடங்களின் ஆரம்பம், ஆனால் இதுவே ஒரு பெரிய சமாதிக் கல் என்றும் குறிப்பிட்டார். இந்தக் கட்டிடத்தின் முழுப்பரப்பும் மான்ஹட்டன் (Manhatton) நகரத்தின் நிலப்பரப்பிற்கு சமமானது. இந்தக் கட்டிடத் தொகுதியில் 7 கட்டிடங்கள் கொண்ட தொகுதியாக இருந்தாலும், உயரமாகத் தெரியும் Twin Towers எனப்படும் இரட்டை மாடிக் கட்டிடங்கள் தான் எல்லோருக்கும் பெரிதாகத் தெரிகின்றது. இதில் ஒன்றின் உயரம் 1,368 அடி ஆகவும், மற்றையது 1,362 அடி உயரமாகவும் உள்ளது. கட்டிடத்தின் வெளிச் சட்டங்கள் அலுமினியத்தினால் ஆனது. இரு கட்டிடங்களிலும் மொத்தம் 43,600 ஜன்னல்கள் இருந்தன. ஒவ்வொரு கட்டிடத்திலும் 110 மாடிகள் உள்ளன. ஒவ்வொரு கட்டிடத்தின் முழு நிலப்பரப்பு 4.7 மில்லியன் சதுர அடியாகும். வடக்குப் புறக் கட்டிடத்தின் உச்சியில் பாரிய உணவுச்சாலையும், நகர் முழுவதையும் பார்க்கக் கூடிய அவதானிப்பு நிலையமும் உண்டு. தெற்குப் புறக கட்டிடத்தின் உச்சியில் வான் அவதான நிலையமும் உண்டு.

1993 ஆம் ஆண்டு பெப்ரவரி 23 ஆம் திகதி நிலமட்டத்திற்கு கீழே அமைந்துள்ள வாகன தரிப்பு நிலையத்தில் குண்டு வெடிப்பு நிகழ்ந்தது. இதில் ஆறு பேர் இறந்தும், 1000 க்கு மேற்பட்டோர் காயமடைந்தனர். 1920 ஆம் ஆண்டிற்கு பின்னர் மான்ஹட்டனில் கட்டிடங்கள் எல்லாம் விமான மோதுதலைத் தாங்கக் கூடியதாக கட்டப்பட்டாலும், ஒரு Boeing 767 போன்ற விமானத்தை தாங்கக் கூடியதாக இருக்கவில்லை. 1945 ஆம் ஆண்டு 102 மாடிகள் கொண்ட எம்பயர் ஸ்டேட் கட்டிடத்தில் புகார் மறைந்திருந்ததால் ஒரு சிறிய விமானம் மோதியது. ஆனால் பெரிய சேதம் ஏற்படவில்லை. ஆனால் World Trade Centre இல் மோதிய விமானம் பெரியது. இது போயிங் 767 ரகத்தை சேர்ந்தது. இதன் மொத்த நீளம் 180 அடி 3 அங்குலமாகும். உள்புற அகலம் 52 அடியாகும். இறக்கைகளின் அகலம் 156 அடி 1 அங்குலமாகும். வாலின் இடத்தில் உயரம் 52 அடியாகும். இவ் விமானம் மொத்தம் 23,980 **US** கலன்கள் எரிபொருளைக் கொண்டு செல்லக் கூடியது. இந்தப் பரிமாணங்களை வைத்து இந்த விமானம் கட்டிடத்தில் மோதினால் எவ்வளவு தாக்கத்தை உண்டாக்கும் என யூகிக்க முடியும். இதைவிட 24,000 கலன்கள் எரிபொருளில் தீப்பற்றிக் கொண்டால், எவ்வளவு பெரிய தீச்சுவாலையை உண்டாக்கும் எனவும் அநுமானிக்க முடியும். உலக வர்த்தக நிலையமோ அல்லது வேறு எந்தக் கட்டிடமோ இந்த அளவு நெருப்பினால் உண்டாகும் தாக்கத்தை தாங்கக் கூடியதாக அமைக்கப்படவில்லை.



இந்தக் கட்டிடங்களின் அமைப்பைப் பார்த்தால், இந்தக் கட்டிடத்தின் நடுவில் ஒரு பலமான **re-inforced core** எனப்படும் நடுவில் பலமான இரும்புச் சட்டங்கள் வைக்கப்பட்டுள்ளது. அதனைச் சுற்றி வர கொன்கிறீற்றினால் அமைக்கப்பட்ட மிகவும் பலமான பெரிய தூண் மாதிரியான அமைப்புக் கட்டிடம் முழுவதும் உச்சியில் இருந்து அடி வரை செல்கின்றது. இதனுடன் ஒவ்வொரு தளத்தின் அடிப் பகுதியில் பலமான இரும்புச் சட்டங்கள் கொண்ட கொன்கிறீட் தகடுகளால் ஆக்கப்பட்ட தளங்கள் நடுத் தூணுடன் இணைக்கப்பட்டு பலமான அமைப்பைக் கொடுக்கும். தளங்கள் கட்டிடத்தை சுற்றிவர அமைந்துள்ள இரும்புச் சட்டங்களுடன் இணைக்கப்பட்டுள்ளது. நடுவில் உள்ள உறுதியான தூண்களின் உள்ளேதான் இக் கட்டிடத்திற்குரிய எலிவேற்றர்களும், மாடிப்படிகளும் அமைந்துள்ளன. முதலில் விமானங்கள் மோதிய போது விமானம் மோதிய மாடிகள் தான் சேதமடைந்தன. எனவே ஒருவரும் மேலதிக சேதம் ஏற்படும் என நினைத்திருக்கவில்லை. அப்படி இருக்கும் போது எப்படி இந்தக் கட்டிடங்கள் இரண்டும் முற்றாக இடிந்து விழுந்தன என்ற கேள்வி எழும். விமானம் மோதிய பின்பும் மோதிய தளங்களின் கீழுள்ள தளங்களும் கட்டிடமும் உறுதியாக இருந்தது. ஆனால் இரும்புச் சட்டங்களினது அல்லது **Steel Beam** களினது உருகுநிலை $800^0C$ ஆகும். 24,000 கலன்கள் விமான எரிபொருள் எரியத் தொடங்கியதும், வெப்பநிலை அதிகரிக்க இந்த இரும்புச் சட்டங்கள் விரிவடைந்தும், வளைந்தும் உருகவும் தொடங்க கொன்கீறீட் தளங்கள் உடையத் தொடங்க இதற்கு மேலாக உள்ள மாடிகள் கீழே இறங்கின. பின்னர் இவற்றின் பாரத்தைத் தாங்க இயலாது கீழிலிருக்கும் தளங்களும் படிப்படியாக உடைந்து கீழே இறங்க முழுக் கட்டிடமும் தரை மட்டமாகியது. கட்டிட நிர்மாணிப்பு பொறியியலாளரான கிறிஸ் வைஸ் என்பவர் கருத்துத் தெரிவிக்கும் போது இந்தப் பெரிய அளவில் விமான எரிபொருள் எரியும் பொழுது இதைத் தாங்கக் கூடிய அமைப்புகள் பூமியில் எங்கும் இல்லையெனக் கூறினார். உலக வர்த்தக மையக் கட்டிடத்தின் நிர்மானிப்பு முகாமையாளரான ஹைமன் பிறவுண் இந்த மாதிரியான நெருப்பிலிருந்து எதையுமே பாதுகாக்க முடியாது என்றும், உடைந்து விழுந்த மாடிகளின் நிறை 100,000 தொன்களுக்கு மேலானது என்றும், அதைக் கீழுள்ள மாடிகளால் தாங்க இயலாது என்றும் கூறினார்.

இந்தக் கட்டிடங்கள் உடைந்து இதன் முழுப் பாரமும் நிலப்பரப்பை தாக்கிய போது இது நிலத்தை அதிரச் செய்து ஒரு சிறிய பூகம்பம் போன்ற நிலைமையை உருவாக்கியது. இந்த பூமியதிர்வை வட அமெரிக்காவிலுள்ள ஆராய்ச்சி நிலையங்கள் பதிவு செய்தன. இந்தப் பூமியதிர்வு 2.4 றிக்டர் அளவீட்டுக்குரிய பூகம்பத்தை ஒத்திருந்தது. ஆனால் பூகம்பம் சில செக்கன்கள் தான் நிலைக்கும். ஆனால் கட்டிடம் இடிந்த பொழுது இந்த அதிர்வு பல நிமிடங்களுக்குத் தொடர்ந்து இருந்தது. இதனால் பெரியதொரு நிலப்பரப்பு பாதிப்படைந்துள்ளது. இந்த கட்டிட அழிவினால் ஏற்பட்ட மொத்தத் தாக்கம், இரண்டாம் உலக யுத்தத்தின் போது ஜப்பானின் மேல் அமெரிக்கா போட்ட அணுக்குண்டின் தாக்கத்தின் நூறில் ஒரு பங்கு தாக்கத்தை கொடுத்ததாகக் கூறப்படுகின்றது. பென்சில்வேனியாவிலுள்ள பௌதிகவியல் பேராசிரியரான பிராங் மொறங் றெல்லி என்பவர் விமான மோதுகையின் போது $1.9 \times 10^9$ அளவு ஜீல்கள் பரிமாணமமுள்ள சக்தியும், விமான எரிபொருள் எரிந்த போது $6.9 \times 10^{10}$ ஜீல்களும், கட்டிடம் இடிந்து விழுந்தபோது $6.8 \times 10^{11}$ ஜீல்கள் சக்தியும் வெளிப்பட்டதாக கூறினார். எந்தவித குண்டுத் தாக்குதலுக்கோ இயற்கை அழிவுகளுக்கோ தாக்குப் பிடிக்கக் கூடியாதாக இந்தக் கட்டிடம் அமைந்திருந்தாலும், இப்படியாக 24,000 கலன்கள் விமான எரிபொருள் விசிறப்பட்டு தீப்பிடிக்கலாம் என இதைச் செய்தவர்கள் தவிர வேறு எவரும் எதிர்பார்த்திருக்கவே மாட்டார்கள்.

**************************************************

*"அறிவும் ஆக்கம்" பற்றிய உங்கள் கருத்துக்களை நீங்கள் எந்த வகையான விடயங்களை இக்கட்டுரையில் எதிர்பார்க்கின்றீர்கள் என்பதை விஜே குலத்துங்கம் - 361 Highglen Ave. Markham, Ontario, L3S 3M2 என்ற விலாசத்திற்கு அல்லது wijeyaku@hotmail.com என்ற முகவரிக்கு e-mail ஐ எழுதி அனுப்பவும்.*

13 வருடங்களாக தமிழர் மத்தியில் நன்மதிப்பைப் பெற்ற

**யோகாஸ்**

☎: (416) 267-0408

## குறுக்கு எழுத்துப் போட்டி இல. 123

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | | | | 2 | | | |
| | ■ | ■ | ■ | | ■ | ■ | |
| | ■ | | | | 3 | ■ | |
| | ■ | ■ | ■ | | | | 4 |
| 5 | | 6 | | ■ | | ■ | ■ |
| | ■ | | | 7 | ■ | | 8 |
| | 9 | ■ | | ■ | ■ | | ■ |
| ■ | | ■ | 10 | | | 11 | |

**இடமிருந்து - வலம்**

1. தமிழ் நாட்டின் தற்போதய முதலமைச்சர்.
3. படைக்கலம் (வல - இட)
4. இருப்பிடம் (வல - இட)
5. காற்று
7. உவர் நிலம் (வல - இட)
8. குடையப்பட்ட மலையின் பகுதி (வல - இட)
9. சுரத்தல் (வல - இட)
10. சுமார்

**மேலிருந்து - கீழ்**

1. தங்கத்தின் தூய்மையை இவ்வாறு கூறுவர்
2. பாட்டு
3. வாழ்நாள் காலம்
4. தோற்றம் (கீழ் - மேல்)
6. நிறுத்து
9. கிராமம்
10. மிகுதி (கீழ் - மேல்)
11. நட்சத்திரம் (கீழ் - மேல்)

சரியான விடைகளில் இருவர் குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்படுவர் இவர்களுக்கு "யோகாஸ்" இல் பாவிக்கக்கூடிய $15, $10 Gift Certificates வழங்கப்படும். இதற்கு cash value கிடையாது. விடைகள் OCTOBER 28, 2001க்கு முன்னர் விளம்பரர் விலாசத்திற்கு அனுப்பி வைக்கவும்.

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| கா | சி | ஆ | ன | ந் | த | ன் | ■ |
| ண் | ■ | ரா | ■ | ■ | ரி | த | ஆ |
| டா | ■ | த் | ■ | மா | ■ | நோ | ■ |
| மி | த் | தி | ர | ன் | ■ | வி | அ |
| ரு | ■ | ■ | ■ | ■ | ■ | ■ | நி |
| க | ர | க | ர | ப் | பி | ரி | யா |
| ம் | ■ | ■ | ■ | ■ | ளி | ■ | ய |
| ■ | ம | ண | ல் | ஆ | று | ■ | ம் |

**122இல் வெற்றி பெற்றோர்**
1) S. Rajaratnam, Etobicoke, Ont.
2) V. தவலக்சுமி, Donmills, Ont.

*ஆட்டிறைச்சி வியாபாரத்தல் தமிழ் மக்களின் உள்ளங்களை வென்றவர்!
* அன்றாட சந்தையில் மரக்கறி, மீன்வகைகளை தினம் தருவித்து வாடிக்கையாளர்களின தொகையில் உயர்ந்தவர்!
* வாடிக்கையாளர்களின் நன்மை கருதி புதிய இடத்தில்

*733 kennedy Road*
*[Ken-Mark Plaza]*

## தமிழ் நாட்டில் பிரயாண சேவை

தமிழ்நாட்டில் சென்னையில் தங்குவதற்கு வீட்டு வசதிகளும், சகல இடங்களுக்கு பிரயாணம் செய்வதற்கான வசதிகளும் எங்களால் நியாயமான செலவில் ஒழுங்கு செய்து தரப்படும். தொடர்புகளுக்கு: **044-621-0294**

# APPLEMORE AUTOMOTIVE

Apple Apple Apple

உட்புற, வெளிப்புற திருத்த, பராமரிப்பு வேலைகளுக்கு என்றும் உங்கள் மத்தியில்

- Detailing
- Motor Shampoo
- Interior Shampoo
- Exterior Wash
- Waxing


SPECIAL



- Repairs
- Safety Certification
- Overall Maintenance
- Under Coating
- Rust Proofing

ONTARIO'S DRIVE CLEAN
Accredited Test & Repair Facility

Apple Apple Apple




**Tel: (416) 285-4998**

**2500 Lawrence Ave. East, Unit #11, Scarborough, ON**

Apple Apple Apple Apple Apple Apple Apple Apple



## VIMAC HOME RENOVATIONS

SPECIALIZING IN INSTALLATION OF
* KITCHEN CABINETS
* COUNTER TOPS
* SPACE MAKING CABINETS
* BATHROOM /LAUNDRY UNITS

FREE ESTIMATE

& GENERAL HOME RENOVATION

CONTACT : VIC AT BUSINESS: 416 266 6566
416 266 7227

REPLACE YOUR COUNTER TOPS & SINK AT REASONABLE RATES



## J DAYCARE



- 7 மாதம் தொடக்கம் 6 வயதுச் சிறார்களுக்கு சிறந்த பராமரிப்பு
- ECE தகுதி பெற்ற நடத்துனர்
- TAX RECEIPT வழங்கப்படும்
- காலை 7:00 மணி - மாலை 6:00 மணிவரை
- மாலை 6:00 மணி - மாலை 10:00 மணிவரை

1 Hr. - $3.00
Day - $15.00
Week -$60.00

தினசரி நடவடிக்கைகள்:-
* உள்ளக, வெளியக விளையாட்டுக்கள், தமிழ் ஆங்கிலம் படிப்பித்தல், இரு நேர உணவு, வெளிப்புறச் சுற்றுலா

☎ 416-502-3033


தொடர்புகளுக்கு: Mrs. S. J. சௌந்தரநாயகம்

151 Lamareaux Dr., TownHouse 99A
(Finch/Birchmount)



## ACTION HONDA

புதிய பழைய
**HONDA, VOLVO**
மற்றும் **CHRYSLER**
வாகனங்களை
ஈழத்தமிழ் மகன்
சோதீஸ் இடம்
பெறும்போது




எங்கும் கிடைக்காத குறைந்த விலை
**I will beat any price**

ஆயுள் காலத்திற்கு
Oil Change இலவசம்
**Life time Oil change**


சிறந்த நேர்மையான சேவை
**Best Service**

வாகனம் வாங்குவதற்கு கிரடிற் ஒரு தடையா? கவலையை விடுங்கள்!! கடன் வசதி ஒழுங்குகள் செய்து தருகிறேன்.



*Call me Now!!* **416-704-1179**

உங்களுக்காக காத்திருக்கும் நேரம்
Mon, Fri, Sat: 9am- 6pm
Tues, Wed: 12pm- 9pm
4334 Kingston Rd, Scarborough





வரேல்லையோ..... சம்பந்தியை அதிர தோரணையில் கேட்டார் உலகர்
ஓ.... கோ.... முழுக் குடும்பமும் பிற்ஸ்பேக் பென்சில்வேனியா
கடவுளை முடிவெடுக்கத் தீர்மானித்து விட்டார்களா?
பேரம்பலத்திற்கு, கடவுள் பக்தி உண்டு ஏனென்றால் நன்கு
கடன்பட்டு கஸ்டப்பட்டு சொந்த பந்தமெல்லாம் கைவிட்ட பின்
ஒரே ஒரு வழி இறைமார்க்கம் தானே....



ரூபியின் திருமணம் (சீதனமில்லாமல்) முடிந்து விட்டால் வந்து....
அர்ச்சனை செய்வேன் என பேரம்பலமும் மனைவியும்
வேண்டினார்கள்
தெரிந்தவர்களிடம் கடன் வாங்கித் தருவேன் என்று சொல்லிவிட்டு தட்டிக் கழிப்பவர்களும் வங்கியில் கடன் எடுத்து திருப்பிக் கட்ட முடியாமல் கொலக்ஷன் கோல் எடுத்தார். உன்னால் முடிந்ததை செய். எங்களுக்கும் சட்டம் தெரியும் என்று லோயர் இல்லாமலே வழக்குப் பேசும் வல்லுனர்கள் இருக்கும் இந்தக் காலத்தில் கடவுளுக்கு முன்னால் சத்தியக் கடதாசியிலே கையெழுத்து போட்ட நாங்களே? என முணு முணுப்பவர் பலர் இருக்க
ஆம்பிளைப் பிள்ளை பிறந்தால் கதிர்காமத்தில் வந்து மொட்டை அடிக்கிறன் என நேர்ந்து பிள்ளைகள் வளர்ந்து 18, 20 வருடமாகியும் கதிர்காமப் பக்கம் எட்டியே பார்க்காத பலர் இருக்கினம் இக் காலத்தில்
(பரவாயில்லை) தாய் தேப்பன் நேர்ந்தால் தான் சில பிள்ளைகள் மொட்டைகளாகவும் சடைகளாகவும் திரிய பெற்றோர் தான் காரணமா?



காக்க....காக்க...கனகவேல்.....காக்க அமெரிக்கா....போவதா....
இல்லையா Yes....Or...No... என்றா நாளையா.... அல்லது
Today.... Tomorrow Or...?

ஆட்டிலறி அன்னம்மாவும் செக்கண்ட் புளோர் செல்லம்மாவும் அமெரிக்கன் ஸ்ரொக் மாக்கற்றில் நிதி போட்டவர்கள் போல சலனமின்றி இருந்தனர். உலகர் ராசம்மா.... பேரம்பலம் அமெரிக்கா போவதும் விடுவதும் இவர்களின் வாக்குகளில் தான் தங்கியிருக்கின்றது
பெரிய பிரச்சினை என்ன வென்றால் ஆட்டிலறி அன்னம்மாவுக்கும் செக்கண்ட் புளோர் செல்லம்மாவுக்கும் சிற்றிசன் இன்னும் கிடைக்கவில்லை?.... தாம் போகமால் உலகர் ராசம்மா அமெரிக்கா செல்ல விடுவார்களா?.... அமெரிக்கா படைகளைத் தான் அனுப்புவதா இல்லையா என செனட் சபையில் தீர்மானிப்பதை விட சிக்கலான கட்டம் நீண்ட பெரு மூச்சின் பின் ஆட்டிலறி சொன்னா.... உலகண்ணை.... உந்த மணிக் கூட்டை கழட்டி வச்சிட்டு போங்கோ என்றா ஆட்டிலறி....
ஏன் எண்டா... ராசம்மாக்கா உது பேரம்பலம்....ஜேர்மனியிலை இருந்து கொண்டு வந்து கொடுத்தது..... திகதி மாதம் காட்டுவது ஆங்கிலம் ஜேர்மன். இங்கிலிசில் 3 4 அரபு பாசையிலும் இருக்கு போடரில் தற்சமயம் செக் பண்ணினா.... அதிலை உள்ள ஒரு பாசையும் உங்களுக்கு தெரியாது.... அன்னம்மாவின் கிறிமனல் மூளை.... அடேயப்பா?.... நான் ஒரு முடிவுக்கு வந்திட்டன் என்ற படி எழுந்தார் உலகர்.... என்ன என்று எல்லோரும் ஆவலாக கேட்க...

# ஒன்ராரியோ மாகாணத்தில் வாகனம் செலுத்துதல்?

-சிவ பஞ்சலிங்கம்



பகுதி (59)

ஒன்ராரியோ மாகாணத்தில் வாகனம் செலுத்துவோர், செலுத்த விரும்புவோர் வீதிப் பரீட்சைகளுக்கு தோற்றுவது, அது தொடர்பான ஒழுங்கு விதிகள் மாகாண, நகர சட்ட விதிகளை மீறும் போது பெற்றுக் கொள்ளும் தண்டனை ரிக்கற்றுகள், அதனை தாமாகவே நீதிமன்றத்தில் எவ்வாறு எதிர்கொள்வது போன்ற விடயங்கள் தொட்டு ஏராளமான விடயங்களை கடந்த அத்தியாயங்களில் பார்த்தோம்.

வாகனம் செலுத்தும் சாரதி அனுமதிப் பத்திரம் பெற்று வாகனம் ஓட்டும் சகலரின் திறமையும் "புள்ளி மதிப்பீட்டு இழப்பு முறை" (Demerit Point System) என்றும் ஒரு மதிப்பீட்டு முறையினால் வாகனம் செலுத்தும் போது மேற்கொள்ளும் தவறுகள் எவ்வாறு மதிப்பீடு செய்யப்படுகின்றது என ஆய்வு செய்வோம்.

ஏழு புள்ளி மதிப்பீட்டு இழப்புகள்

* விபத்து நடந்த இடத்தில் நிறுத்தாது ஓடித் தப்பினால்
* பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் நிறுத்தும் படி சைகை காட்டும் போது நிறுத்தாமல் ஓடித் தப்பினால்

மேற்குறிப்பிட்ட இரு தவறுகளும் புள்ளி மதிப்பீட்டு இழப்புகளை ஆகக் கூடுதலாக எதிர் கொள்ளும் மிக பிரதான முக்கிய தவறுகள் ஆகும்.

**ஆறு புள்ளி மதிப்பீட்டு இழப்புகள்**

* தலை தெறிக்க மிக அவதானமில்லாத வாகன ஓட்டங்கள் (Careless Driving or Racing)
* பாடசாலை பஸ் காட்டும் நிறுத்துகை சைகைக்கு நிறுத்தத் தவறுதல்

(அதாவது பாடசாலை மாணவர்களை ஏற்றி, இறக்கும் போது, நிறுத்துகை சைகையுடன், சிவப்பு நிற பிரகாசமான ஒளி சைகைகளினால் யாவரும் முன்னுக்கும், பின்னுக்கும் வந்து கொண்டு இருக்கும் இரு பக்க வாகனங்களும் நிறுத்திக் கொள்ள வேண்டும் என்ற, நிறுத்துகை சைகை எச்சரித்துக் கொள்ளும். ஏனெனில் பஸ் வண்டியில் ஏறி, இறங்கும் மாணவர்கள் வீதியினை கடந்து செல்ல வேண்டும் என்பதற்காக இவ் ஒழுங்கு விதி பேணப்படுகின்றது)

* வரையறுக்கப்பட்ட வேகத்தினை விட 50k.m மணி வேகம் மேலதிகமாக செலுத்தினால்

(உதாரணமாக 60k.m வேகத்தில் செலுத்த வேண்டும் எனச் சட்ட ரீதியாக வரையறுக்கப்பட்ட வீதியில் 110 k.m மணி வேகத்தில் செலுத்தனால் வரையறுக்கப்பட்ட வேகத்தனை விட 50 k.m மணி வேகமாக அதிகமாக செலுத்தப்படுகின்றது)

**ஐந்து புள்ளி மதிப்பீட்டு இழப்புகள்**

* பாதுகாப்பில்லாத புகையிரத கடவைகளில் நிறுத்த தவறினால்

**நான்கு புள்ளி மதிப்பீட்டு இழப்புகள்**

* வரையறுக்கப்பிட்ட வேகத்தினை விட 30 k.m மணி 49 k.m மணி வரை செலுத்தினால்
* ஒரு வாகனத்துக்கு மிக அருகில் பாதுகாப்பில்லாது வாகனம் செலுத்தினால்

**மூன்று புள்ளி மதிப்பீட்டு இழப்புகள்**

* வரையறுக்கப்பட்ட வேகத்தினை விட 16 k.m மணி - 29 k.m மணி வரை அதிகமாக செலுத்தினால்
* பாதை முதல் உரிமைகளை ஏனைய வாகனங்களுக்கு வழங்கத் தவறினால்
* பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவரின் வழிகாட்டலுக்கு அடிபணிய தவறினால்
* ஒரு விபத்து நடந்து சட்ட ரீதியாக அதனை அறிவிக்க தவறினால்
* நெருக்கமாக பிரயாணிகளை ஆசனங்களில் அமர்த்தினால்
* மூடப்பட்ட தெருக்களில் வாகனம் செலுத்தினால்
* புகையிரதம் வரும் நேரம் தடையினை மீறி கடந்து சென்றால்
* நிறுத்துகை சைகை (Stop Sign), சிவப்பு சைகை (Red Light) போன்றவற்றில் அடிபணிந்து போகத் தவறினால்
* தவறான எதிர்ப் பக்கத்து ஒழுங்கையால் வாகனம் ஓட்டினால்
* ஒரு வழி பாதையில் பிழையாக செலுத்தினால்
* Improper driving when road is divided into lanes
* Crossing divided road where no proper corssing is provided


# JEY JEY WELDING

- வீட்டுத் தேவைகளிற்கான சகலவிதமான Grill வேலைகளும்
- **Swimming Guard Rails**
- **Fencing**
- **Safety Grills for Store**
- **BSMT Safety Grills**
- **Welding** சம்பந்தமான வேலைகள்
- கோயிலிற்கு தேவையா Grill வேலைகள்

அனைத்து வேலைகளிக்கும் அழையுங்கள்: 416 439 - 7159

தமிழர்கள் மத்தியில் பலவருட அனுபவம் மிக்கவர்களால் ஆரம்பிக்கப்பட்டுள்ள புதியதோர் வெதுப்பகம்

# BREAD MASTER BAKERY

# பிறட் மாஸ்ரர் பேக்கரி

மொத்த ஓடர்களுக்கு விசேட கழிவு வழங்கப்படும்



றோஸ் பாண் கிடைக்கும்

பாண், பணிஸ், றோல்ஸ் அனைத்தும் சுடச்சுட எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம்.

வாரத்தில் 7 நாட்களும்

3 for 0.99¢

**31 TAPSCOTT ROAD, UNIT #B3**

LOWER LEVEL, MALVERN TOWN CENTRE - SCARBOROUGH

**TEL: (416) 299-5083**


**இரு புள்ளி மதிப்பீட்டு இழப்புகள்**

* தேவையில்லாமல் கார் கதவினை ஏனையோருக்கு இடைஞ்சலாக திறந்து வைத்திருந்தால்
* தவறான திருப்பும் நிலைமைகள்
* நடை பாதையில் பாதசாரிகளுக்கு நிறுத்த தவறினால்
* சைகைகளுக்கு அடி பணி தவறினால்
* வீதியினை ஏனைய வாகனங்களுடன் பகிர்ந்து வாகனத்தினை செலுத்த தவறினால்
* தேவையில்லாம் மெதுவாக வாகனம் செலுத்தினால்
* ஆசனப்பட்டியினை சாரதி அணிய தவறினால்
* சிக்னல் போடத் தவறினால்
* பின்னோக்கி (Reverse) தேவையில்லாமல் பெரிய வீதிகளில் நகர்ந்தால்

இப் புள்ளி மதிப்பீட்டு இழப்புகளை ஒருவர் இழந்தால் இரு வருடங்கள் மட்டுமே பதிவில் இருக்கும். இரு வருடங்களுக்கு பின்னர் அது அழிக்கப்பட்டு விடும்.

G(1) அல்லது G(2) சாரதி அனுமதிப் பத்திரம் வைத்திருப்பவர்கள் இரண்டு அல்லது இரண்டுக்கு மேற்பட்ட புள்ளி மதிப்பீட்டுக்களை இழந்தால் போக்குவரத்து அமைச்சில் இருந்து முதலில் எச்சரிக்கைக் கடிதம் அனுப்பப்படும். ஆறு புள்ளி மதிப்பீட்டு இழப்புகளை எதிர் கொண்டால் இது பற்றிய நேரடி எச்சரிக்கைக்கு அழைப்பார்கள். அவ் அழைப்பினை உதாசீனம் செய்தால் சாரதிப் பத்திரம் இரத்துச் செய்யப்படும். ஒன்பது புள்ளி மதிப்பீட்டு இழப்புகளை எதிர் கொண்டால் இரு மாதங்களுக்கு சாரதிப் பத்திரம் இரத்துச் செய்யப்படும். இரு மாதங்கள் இரத்துச் செய்யப்பட்டு தண்டனை காலத்தின் பின்பு புள்ளி மதிப்பீட்டு இழப்புகள் நான்காகக் குறைக்கப்படும். ஒன்பது புள்ளி மதிப்பீடுகளை இழந்தால் ஆறு மாதங்களுக்கு லைசென்ஸ் இரத்துச் செய்யப்படும்.

பூரணமான (G licence) சாரதிப்பத்திரம் வைத்திருப்பவர்கள் [illegible] புள்ளி மதிப்பீட்டினை இழந்தால் முதலில் எச்சரிக்கைக் கடிதம் அனுப்பப்படும். ஒன்பது புள்ளி மதிப்பீடுகளை இழந்தால் நேரடி எச்சரிக்கைக்கு அழைக்கப்படுவார்கள். நேரடி அழைப்பினை உதாசீனம் செய்தால் லைசென்ஸ் இரத்துச் செய்து மீண்டும் வீதிப் பரீட்சை, எழுத்துப் பரீட்சைக்கு தோற்ற வேண்டும். பதினைந்து புள்ளி மதிப்பீட்டினை எதிர் கொண்டால் ஒரு மாதம் லைசென்ஸ் இரத்துச் செய்யப்படும். ஒருமாதம் லைசன்ஸ் இரத்துச் செய்யப்பட்டு அறிவிக்கப்படும் போது லைசென்சினை போக்குவரத்து அமைச்சில் கையளிக்கத் தவறினால் மேலும் இரு வருடங்களுக்கு இரத்துச் செய்யப்படும். இரத்துச் செய்யப்பட்ட காலம் முடிவடைந்த பின்னர் தங்கள் புள்ளி மதிப்பீட்டு இழப்புகள் ஏழாக குறைக்கப்படும். (தொடரும்)

மேலதிக தொடர்புகளிற்கு: சிவ பஞ்சலிங்கம்-(416) 321-0999

*(Professional Licensed Instructor in Car & Class Room)*

# பழந்தமிழர் கலாச்சாரமும் அக்குபங்ஷர் வைத்தியமும்

**பகுதி:- 21** -Dr. N.S. Moorthy, Ph.D.

கடகராசி, மகரராசி ஆகியவற்றைப் பொறுத்த வரையில் இவை இரண்டும் தத்தமது கட்டுப்பாட்டிலுள்ள உடலுறுப்புக்களின் வளர்ச்சி, தளர்ச்சி, சுகநிலை, நோய்நிலை ஆகியற்றுக்குப் பொறுப்பாகவுள்ளன. கடகராசி வலுப்பெற்றிருக்கும் ஒருவரின் இரப்பை, சமிபாட்டுத் தொகுதி, மார்பகங்கள் ஆகியவை நல்ல திடகாத்திரத்துடன் காணப்படுவதுடன் எவ்விதமான உணவு உண்டாலும் இலகுவில் சமிபாடடையும் தன்மை, குழந்தை பெற்றதும் தாய்மார்களுக்குப் போதியளவு தாய்ப்பால் சுரத்தல் போன்ற சுகநிலைகள் காணப்படும். அதே வேளை மேற்கூறிய கடகராசியின் பாதை மாறுபடும் போது தாய்ப்பால் குறைவு, இரைப்பையில் தாபிதம் (Gastritis), புண்கள் (Ulcer), நெஞ்செரிவு (Heart Burn) உப்பிசம் (Flatulence), வயிற்றோட்டம் (Diarrhea), குடற்பகுதியின் அதிவேக செயற்பாடு (Irritable Bowel Syndrome), பெருங்குடல் பாதிப்பு (C[illegible]iac Disease & Crohn's Disease) போன்றவற்றையும் மார்பகப் புற்று நோய் (Breast Cancer) போன்ற பாரிய நோய்நிலைகளும் ஏற்படலாம்.

அதே வேளை மகர இராசியைப் பொறுத்தவரையில் மேற்படி இராசி வலுப்பெற்றிருக்கும் நபர்கள் உரமான, அழகான பற்களையும், உறுதியான எலும்புகள், முழங்கால்கள் ஆகியவற்யையும் கொண்டிருப்பார்கள். மகரஇராசியின்பார்வை மாறுபாடு அடையும் போது அடிக்கடி பல் வைத்தியரிடம் செல்ல வேண்டியநிலை, கை, கால், மூட்டுகளில் வலி வீக்கம் (Arthritis) எலும்புகளின் தன்மை குறைவுபட்டு உடையக் கூடிய நிலைமை (Osteoporosis), முதுகில் கூன் விழுதல் (Scoliosis) இதனால் முதுகுவலி, இடுப்புவலி, தலைவலி போன்ற நோய்கள் ஏற்படுகின்றன.

பஞ்சபூதங்களைப் பொறுத்த வரையிலும் கூட மேற்கூறிய இரு இராசிகளுக்கும் உரியவையான நீர், நிலம் ஆகிய இரண்டுக்கும் நெருங்கிய தொடர்பிருப்பதைக் காணலாம். நாம் வாழும் இந்த உலகத்தை பூமாதேவி என்று அழைக்கும் எமது பண்பாட்டின் பெருமையை நாம் மறக்கலாமா? "அகழ்வாரைத் தாங்கும் நிலம் போல" என்று பொறுமையின் இருப்பிடமான பூமியைப் பெண்ணுக்கு உவமையாகக் கூறும் பெருமையைப் பெற்ற இனம் எமது தமிழினம். 'தாயைப் பழித்தாலும் தண்ணீரைப் பழிக்காதே' என்று குடிக்கும் நீருக்குரிய இடத்தைக் கொடுத்தது நமது பண்பாடு. உலகம் மூன்று பங்கு நீரால் சூழப்பட்டுள்ளது. நமது உடலும் அவ்விதமே! நீரை வழங்கும் மழையை தெய்வமாகப் போற்றியவர்கள் தமிழர்.

> **"வானின்று உலகம் வழங்கி வருதலால்**
> **தானமிழ்தம் என்றுணரற்பாற்று"**

என்று முழங்கினார் தமிழ் முனிவர் வள்ளுவர்.

உயிரினங்கள் வாழவும் வளரவும் இவ்விரு பஞ்சபூதங்களும் அத்தியாவசியமானவை ஆகும். இவற்றுடன் உலகை உய்ய வைக்கும் கதிரவனின் வெப்பமும் சேர்ந்து கொண்டால் உலகில் பஞ்சத்துக்கே இடமில்லை. இதன் பெருமையை விளக்கவும், சூரியதேவனுக்கு நன்றி சொல்லவும், உழைப்பின் பெருமையை உலகுக்கு எடுத்தியம்பவும் தமிழர் தைத்திருநாளாகப் பொங்கல் திருநாளைக் கொண்டாடி வந்தனர். இன்றும் கொண்டாடி வருகிறனர்.

உலகத் தொழிலாளர்களின் ஒருங்கிணைந்த நாளாக இன்று மேதினம் உள்ளது. ஐரோப்பிய நாடொன்றில் வெடித்த உழைப்பாளர்களின் புரட்சியை உலகுக்கு எடுத்துக் காட்டும் நாளாக ஆரம்பிக்கப்பட்டது இத் திருநாள். இது அரசியல் சாக்கடைக்குள் விழுந்து புரள்வதை இன்று நாம் அறிகின்றோம். ஆனால் தைத்திருநாளானது, பல்லாயிரம் ஆண்டுகளுக்கு



முன்பே மத மார்ச்சரியங்களுக்கு அப்பாற்பட்டு மதத் தலைவர்களின் பிறந்த நாளாகவோ அல்லது ஞானம் கிடைத்த நாளாகவோ அன்றி ஒரு தனி நபரது புகழைப்பாடும் நாளாகவோ இருக்கவில்லை. அத்திருநாள் நெற்றி வியர்வை நிலத்தில் சிந்தப் பாடுபட்டு இயற்கையின் அரவணைப்புடன் உடல் உழைப்பும் சேர்ந்தது. உலக மக்களுக்கு அத்தியாவசியமான உணவை அதாவது நெல்மணியை விளைவித்து வழங்கும் அந்த உழைப்பாளனின் பெருமையை உலகத்துக்கு எடுத்தியம்பும் நாள். அதுவே நமது பண்டைத்தமிழரின் திருநாளான தைப்பொங்கல் விழா. உலகின் பல நாடுகளிலும் விவசாயிகள் பற்பல விழாக்களை தத்தமக்கென கொண்டாடி வருகிறார்கள். ஆனால் அவற்றுக்கெல்லாம் இல்லாத பெருமை நமது பொங்கல் நன்நாளுக்குண்டு. அதுதான் நன்றி அறிவித்தல். **'என்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை செய்நன்றி கொன்ற மகற்கு'** என்கிறார் திருவள்ளுவப் பெருந்தகை.


உழவர்கள் தாம் களை பிடுங்கி, உழுது, நாற்றுநட்டு, நீர்பாய்ச்சி, காவல் காத்து, நெல்மணிகளை வெட்டிச் சூடடிக்கின்றனர். இத்தகைய விளைச்சலுக்கெல்லாம் உறுதுணையாக, ஒத்தாசையாக இருந்தது இயற்கை. அதாவது சூரியனுக்கு உலகத்தின் சார்பில் தமது நன்றியைத் தெரிவிக்கும் உன்னத நாள் இதுவாகும்.

தமிழர்கள் இத்துடன் நிற்காமல் ஒரு படி மேலேயே சென்று காலம்பூராக தம்முடன் சேர்ந்து உழைத்த உழைப்புடன் மட்டுமல்லாது தமது இரத்தத்தைப் பாலாக்கி வழங்கும் பசு இனத்திற்காக விழா எடுக்கின்றனர். அவ்விழா நன்றிக்கடன் செலுத்தும் விழாவாக 'மாட்டுப் பொங்கல்' என தைப்பொங்கலுக்கு அடுத்த நாளாகக் கொண்டாடி வருகின்றார்கள். இயற்கைக்கு நன்றி சொல்வதுடன் நில்லாது அதற்கும் மேலாக தனக்குதவிய வாயில்லா



மிருகங்களுக்கும் நன்றி சொல்லி விழா எடுத்தவர்கள் நமது பண்டைத் தமிழர் என்பதில் நாம் பெருமை கொள்ளாமல் இருக்க முடியுமா? 'முல்லைக் கொடிக்குத் தேர் ஈந்த பாரியும்', பசுவின் முறைப்பாடைக் கேட்டு தன் மகனை தேர் ஏற்றிக் கொன்று நீதி வழங்கிய மனுச்சோழனும் தமிழர் என்பதை நாம் மறக்கத்தான் முடியுமா? இத்தகைய பெருமை படைத்த நாம் இன்று மற்றவர்களாக மாறும் நிலை மாறி நன்றியுணர்வு பொங்க வேண்டும். நமது இனம் பெரு[illegible] வேண்டும்.


கனேடிய தமிழர் வர்த்தக சம்மேளத்தினரின்
விருது பெற்ற
VIVEKA PRINTERS



உங்கள் அச்சுவேலைகள் எதுவாக இருந்தாலும் முதலில் நீங்கள் நாடவேண்டிய இடம்
80 BARBADOS BLVD., UNIT #4
SCARCOROUGH, ONT.
☎ (416) 410-6401

தமிழ் மக்களின் நெருங்கிய நண்பர்
ரவி நடராஜா

- வாகன விபத்துக்குள்ளாகியவரின் இழப்பீடு பற்றி தகுந்த ஆலோசனைகள் வழங்கப்படும்
- உரிய இழப்பீடுகள்
- மற்றைய இழப்பீடுகள்
- விபத்துக்குள்ளாகியவரின் சம்பள இழப்பீடுகள்
- மற்றும் வாகன விதி முறைகளை மீறிய குற்றங்கள



**Accident & Traffic Ticket**
(13 Years Insurance Claims Experience)

Tel: (416) 245-6555
2095 Weston Road
Suite 203, Toronto, Ont.

Tel: (416) 755-2801
2390 Eglinton Ave. E.
Suite 223, Scar., Ont.

# விளையாட்டுத் தகவல்கள் (85)

-எஸ். கணேஷ்



**உலகத்தில் ரெனிஸ் ஆட்டத்தில் முதல் சரித்திர நிகழ்வு**

ரெனிஸ் ஆட்டத்தில் Grand Slam ஆட்டங்களில் முதல் தரமாக பெண்கள் பிரிவில் சகோதரிகளான வீனஸ் வில்லியம்ஸ், சறீனா வில்லியம்சும் US. open இறுதியாட்டத்தில் மோதியுள்ளனர். ரெனிஸ் சரித்திரத்தில் முன்னொரு பொழுதும் இல்லாத ஒரு சரித்திர நிகழ்வாய் இது அமைந்துவிட்டது. மேலும் சொல்லப் போனால், முதன் முதலில் இரு கறுப்பு இன பெண்மணிகள் மோதிய ஒரு இறுதிப் போட்டி என்ற பெருமையையும் இந்த US. open Final பெறுகின்றது. இவர்கள் இருவரும் மோதிய இறுதியாட்டத்தில் பிரபல பாடகர் ஆன 'Diana Ross' அவர்கள் ' 'God Bless America' என்ற பாடலை ரெனிஸ் ரசிகர்கள் முன்னிலையில் பாடினார். சகோதரிகளான இருவரும் அமெரிக்க வீராங்கனைகளே என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. ரெனிஸ் ஆட்டத்தில் வெள்ளை இனத்தவரே ஆதிக்கம் என்ற கருத்திற்கு இவ்விரு கறுப்பு இன சகோதரிகளும் சாவுமணி அடித்துள்ளனர் என்றால் மிகையாகாது.



Venus Williams (right) and her sister Serena share the spotlight following Venus' historic win in the US Open women's

இனி விடயத்திற்கு வருவோம். Venus Williams, Serena வை 6-2, 6-4 என்று இறுதியாட்டத்தில் வெற்றி கொண்டுள்ளார். 21 வயதுடைய Venus இன்னுடைய 4வது Grand Slam வெற்றியாகும். இது இவருடைய 5வது Grand Slam Finals ஆகும். 1999 ஆம் ஆண்டு Serena US. open Champion ஆக வந்தார். இப்போது Serena க்கு 19 வயது மட்டுமே. வீனஸ் வில்லியம்ஸ் 2000, 2001 ஆகிய இரண்டு ஆண்டுகளிலும் US. open இனை வென்று உள்ளார். ஆக மொத்தத்தில் கடந்த மூன்று ஆண்டுகளாக US Open Cup வில்லியம்ஸ குடும்பதத்திற்கே சொந்தமாகியுள்ளது.

**Serena Williams**

Sept 26, 1981 ஆம் ஆண்டு (மிச்சிக்கன்) அமெரிக்க மாநிலத்தில் பிறந்தார். 5 அடி 10 அங்குல உயரமுள்ள இவர் இதுவரை 9 Grand Slam Titles களை கொண்டுள்ளார். 2001 ஆம் ஆண்டு அவுஸ்திரேலிய Open இல கால் இறுதியாட்டத்தில் Martina Hingis இடமும், French Open Wimbledon இல் Jennifer Capriati இடமும் கால் இறுதியாட்டத்தில் தோல்வி கண்டார். 2000 ஆண்டில் விம்பிள்டனில் Venus தனது சகோதரியிடம் அரை இறுதியாட்டத்தில் தோல்வி கண்டார். 1999 ஆம் ஆண்டு 7 வது இடத்தில் இருந்து கொண்டு முதலாவது இடத்தில் உள்ள Martina Hingis வை US. open இல் வெற்றி கொண்டார். இந்த US. open இல் இரண்டாம் இடத்தில் இருந்த Lindsay Davenport யையும், 4 வது இடத்தில் அந்த ஆண்டில இருந்த Monica Seles யையும் வெற்றி கொண்டதன் மூலம் 7 வது இடத்தில் இருந்து 4வது இடத்திற்கு உயர்த்தப்பட்டார்.

**Venus Willams**

June 17 ஆம் திகதி 1980 ஆம் ஆண்டு கலிபோர்ணியா மாநிலத்தில் பிறந்தார். 6 அடி 1½ அங்குல உயரம் உள்ள இவர் இது வரை 20 Titles களை பெற்றுள்ளார். 2001 விம்பிள்டன் அரை இறுதியாட்டத்தில் Martina Hingis இடம் தோல்வியுற்ற இவர். 2001 US. open ஐ மீண்டும் வென்று இரண்டு வருடங்கள் தொடர்ந்து வென்றுள்ளார்.

**Sept.23ஆம் திகதி வெளியிடப்பட்ட WTA பெண்களுக்கான ரெனிஸ் RANKING**

| | | | |
|---|---|---|---|
| 1. Martina Hingis | (Swiss) | 5256 | புள்ளிகள் |
| 2. Jennifer Capriati | (USA) | 5123 | புள்ளிகள் |
| 3. Lindsay DavenPort | (USA) | 4345 | புள்ளிகள் |
| 4. Venus Williams | (USA) | 4333 | புள்ளிகள் |
| 5. Kim Clijsters | (Belgium) | 3246 | புள்ளிகள் |
| 6. Amelie Mauresmo | (France) | 2842 | புள்ளிகள் |
| 7. Serena Williams | (USA) | 2753 | புள்ளிகள் |
| 8. Justine Henin | (Belgium) | 2742 | புள்ளிகள் |
| 9. Monica Seles | (USA) | 2414 | புள்ளிகள் |
| 10. Nathali Tauziat | (France) | 2083 | புள்ளிகள் |


YARL WINDOW COVERING
1530 WARDEN AVENUE

உங்கள் எண்ணம் போல் வண்ண, வண்ணத் திரைச் சேலைகளுக்கு இப்பொழுதே தொடர்புகொள்ளுங்கள்

CUSTOM MADE..
* VENETIAN BLINDS
* VERTICAL BLINDS
* ROLLER BLINDS
* PLEATED SHADES
* DRAPERIES



இருபத்தாறு வருடங்களுக்கு மேல் அனுபவம் உள்ளவர்களால் உங்கள் வீட்டிற்குத் தேவையான திரைச் சேலைகளைத் தைத்தக் கொடுக்கப்படும்


தொடர்புகளுக்கு: என். செல்வம்
(416) 383-0205
(416) 650-0377

FREE ESTIMATE


2000 ஆண்டில் முதலாவது Grand Slam Title ஐ விம்பிள்டனில Lindsay Davenport ஐ வென்றதன் மூலம் பெற்றார். இதுவரை US. open வென்றவர்களை இங்கு பார்போம்.

### Past singles winners - US OPEN

| Year | Men (ஆண்கள்) | Women (பெண்கள்) |
|---|---|---|
| 2001 | Lleyton Hewitt | Venus Williams |
| 2000 | Marat Safin | Venus Williams |
| 1999 | Andre Agassi | Serena Williams |
| 1998 | Patrick Rafter | Lindsay Davenport |
| 1997 | Patrick Rafter | Martina Hingis |
| 1996 | Pete Sampras | Steffi Graf |
| 1995 | Pete Sampras | Steffi Graf |
| 1994 | Andre Agassi | Arantxa Sanchez Vicario |
| 1993 | Pete Sampras | Steffi Graf |
| 1992 | Stefan Edberg | Monica Seles |
| 1991 | Stefan Edberg | Monica Seles |
| 1990 | Pete Sampras | Gabriela Sabatini |
| 1989 | Boris Becker | Steffi Graf |
| 1988 | Mats Wilander | Steffi Graf |
| 1987 | Ivan Lendl | Martina Navratilova |
| 1986 | Ivan Lendl | Martina Navratilova |
| 1985 | Ivan Lendl | Hana Mandlikova |
| 1984 | John McEnroe | Martina Navratilova |
| 1983 | Jimmy Connors | Martina Navratilova |
| 1982 | Jimmy Connors | Chris Evert Lloyd |
| 1981 | John McEnroe | Tracy Austin |
| 1980 | John McEnroe | Chris Evert Lloyd |
| 1979 | John McEnroe | Tracy Austin |
| 1978 | Jimmy Connors | Chris Evert |
| 1977 | Guillermo Vilas | Chris Evert |
| 1976 | Jimmy Connors | Chris Evert |
| 1975 | Manuel Orantes | Chris Evert |
| 1974 | Jimmy Connors | Billie Jean King |
| 1973 | John Newcombe | Margaret Smith Court |
| 1972 | Ilie Nastase | Billie Jean King |
| 1971 | Stan Smith | Billie Jean King |
| 1970 | Ken Rosewall | Margaret Smith Court |



The 2001 US Open men's singles champion Lleyton Hewitt (AUS) receiving his trophy after his win over Pete Sampras (USA).

**ATP ஆண்களுக்கான ரெனிஸ் RANKING**

| | | | |
|---|---|---|---|
| 1. Gustavo Kuerten | (பிரேசில்) | 755 | புள்ளிகள் |
| 2. Andre Agassi | (அமெரிக்கா) | 683 | புள்ளிகள் |
| 3. Lleyton Hewitt | (அவுஸ்ரேலியா) | 635 | புள்ளிகள் |
| 4. Patrick Rafter | (அவுஸ்திரேலியா) | 557 | புள்ளிகள் |
| 5. Juan Carlos | (ஸ்பெயின்) | 552 | புள்ளிகள் |
| 6. Yevgeny Kafelnikw | (ரஷ்யா) | 400 | புள்ளிகள் |
| 7. Pete Sampras | (அமெரிக்கா) | 363 | புள்ளிகள் |
| 8. Tim Henman | (இங்கிலாந்து) | 352 | புள்ளிகள் |

# ஒரு சாதாரண மனிதனின் சிந்தனையில்....



## "நலம் நலமறிய ஆவல்"

உலகம் சுய நலத்தில் சுழல்கின்றது என்ற உண்மையை பலர் மறந்து விடுகிறார்கள். அதிலும் தமது நலத்தைப் பற்றி எண்ணும் போது மட்டும் அது சுயநலமல்ல பொது நலம் என்பது போலவும் மற்றவர்கள் அவர்களது நலத்தை எண்ணும் போது அது மட்டும் சுயநலம் என்ற வகையில் பலர் எண்ணுவதாலும் நடந்து கொள்வதாலுமே இன்று உலகில் பல அனர்த்தங்கள் விளையக் காரணமாக இருக்கின்றன. பொதுநலம் ஒன்று மட்டும் தான் சுய நலத்தை பாதுகாக்கும் என்ற உண்மையை உலகில் உள்ளவர்கள் என்று உணர்கின்றார்களோ அன்று தான் உலக அமைதிக்கும் சமாதானத்திற்கும் வழி பிறக்கும்.

இலங்கையில் வாழுகின்ற தமிழ் மக்களின் சாதாரண மனித உரிமைகள் சிங்கள தேசியவாத அரசாங்கங்களினால் பறிக்கப்பட்டமையே இன்றைய தமிழீழப் போராட்டத்தின் காரணமாகும். எமது உரிமையை நாம் திரும்பப் பெற எமக்கு இருந்த ஒரே வழி விடுதலைப் போராட்டம் தான். இதுவே சிலரது கண்ணுக்குப் பயங்கரவாதம் ஆகும். போராடத் துணிந்துவிட்ட நாம் விளைவுகளையும் ஏற்றுக் கொண்டே ஆக வேண்டும். போராட்டத்தில் நாம் வெற்றி பெற மக்கள் ஆதரவும் மற்றைய நாடுகளின் ஆதரவும் நிச்சயமாக இருந்தே ஆக வேண்டும். தமிழ் மக்களின் ஏகோபித்த ஆதரவு இருந்த போதும் மற்றைய நாடுகளின் ஆதரவு உண்டா?

இல்லை, காரணம் அரசியல். ஒரு நாட்டு உள் விவகாரங்களுக்குள் மற்றைய நாடுகள் தலையிடக் கூடாது. இக் கொள்கையை வல்லரசு நாடுகள் உட்பட சகல நாடுகளும் கடைப்பிடிப்பது போல் காட்டிக்கொள்வது தான் எமது சாதாரண மனித உரிமைப் போராட்டத்திற்கே மற்றைய நாடுகளின் வெளிப்படையான உதவி கிடைக்காமைக்கு காரணமாகும். சிங்கள இனவாத அரசுகளுக்கு மற்றைய நாடுகளின் உதவி கிடைக்க சாதகமாக இதுவரை இருந்தது எமது விடுதலைப் போராட்டத்தை அவர்கள் பயங்கரவாதம் என்ற வரைவிலக்கணத்துக்குள் இடுவதுதான். அப்படியானால் சிங்கள



அரசுகள் தமிழினத்தை அழித்து ஒழிப்பது சரி என்று தான் வல்லரசு நாடுகள் உட்பட அனைத்து நாடுகளும் நம்புகின்றனவா? பார்த்துக் கொண்டு இது வரையும் ஒரு உதவியும் செய்யாமல் தானே இருக்கிறார்கள் என்று நீங்கள் எண்ணுவதும் சரிதான்.

உதாரணத்துக்கு ஒரு சின்னவிடயத்தை உங்களுக்கு சொல்லலாம் என்று எண்ணுகின்றேன். இந்த நாட்டில் ஆண்களுடன் ஒப்பிடும் போது பெண்களுக்கும் சம உரிமைகள் இருப்பது எல்லோருக்கும் தெரிந்ததே. அதே வேளை பல பெண்கள் குடும்ப சச்சரவு காரணமாக பொலீஸில் சென்று முறையிட்டுகின்றனர். தனது கணவன் கொலைப் பயமுறுத்தல் செய்கின்றார் என்றும் தமக்குப் பாதுகாப்பு தேவை என்று கேட்டும், அந்த பாதுகாப்பு கிடைக்காமல், சில பெண்கள் தமது உயிருக்கு பயந்தது போலவே தமது முன்னைய கணவன்மாராலோ, மாஜிக் காதலராலோ கொல்லப்பட்டும் இருக்கின்றார்கள். பொலீஸ் ஏன் அவர்களுக்கு பாதுகாப்பு கொடுத்து அவர்கள் புகாரை ஏற்றுக் கொண்டு கணவன் மாரையோ. காதலர்களையோ கைது செய்யவில்லை என்ற கேள்வி தோன்றலாம். ஆனால் சட்டத்தின் படி ஒருவர் கொடுக்கும் வாக்கு மூலத்தை மட்டும் வைத்துக் கைது செய்ய முடியாது. கைது செய்யப் போதிய ஆதாரம் தேவை. ஆதாரம் கொலையில் முடிவது துர் அதிஸ்ட்டம் என்றே கூற வேண்டும். புகாரை மாத்திரம் ஆதாரமாக கொண்டு கைது செய்ய முடியுமாயின் நாம் எமக்கு விரும்பாதவர்களை இலகுவில் சிறைச்சாலைக்கு அனுப்பிவிடலாம்.

இப்படி வீட்டு விடயத்திலேயே அதிகாரத்தின் கை கட்டப்பட்டு இருக்கும் போது நாட்டு விடயத்தில் எவ்வளவு கடினம் என்று நீங்கள் ஊகித்துக் கொள்ளலாம். அதே வேளை அதிகாரத்தின் உதவி எமக்கு நிச்சயமாக தேவை என்பதை மறந்து விடக் கூடாது. நாம் ஒற்றுமையாக இருந்து அமெரிக்கா போன்ற வல்லரசு நாடுகள் எம்மை உடைத்து எம்மிடம் வியாபாரம் செய்யவிடாமல். நாம்தான் பார்த்துக் கொள்ள வேண்டும். அமெரிக்கா உதவி செய்து வளர்ந்தது தான் ஆப்கானிஸ்தான் தலிபான் இயக்கம். சோவியத் யூனியனை நாட்டை விட்டுத் துரத்த அமெரிக்காவின் உதவி தலிபான்களுக்குத் தேவைப்பட்டது. விடுதலைப் போராட்டத்திற்கு தலிபான்களுக்கு உதவி செய்து வெற்றி பெறச் செய்தும் பின்லேடனுடன் சேர்ந்து அமெரிக்காவிற்கு எதிராக நிற்கிறார்கள். அமெரிக்கா வளர்த்து விட்ட விடுதலை இயக்கங்களே இப்போ அமெரிக்காவிற்கு எதிராக செயல்படும் போது அதனை அமெரிக்கா பயங்கரவாதம் என்று கூறுகிறது.



அமெரிக்கா எமது விடுதலைப்போராட்டத்திற்கு ஆதரவு அளிக்காவிட்டாலும் எமது இனத்திற்கு ஒரு நல்ல முடிவு வர வேண்டிய காலம் போலும். நோர்வே நாட்டின் தலையீட்டால் நிலைமைகள் எமக்கு சாதகமாக திரும்பத் தொடங்கி உள்ளன. விமான நிலையத்தில் ஏற்பட்ட தாக்கம் சிங்கள அரசை கதி கலங்க வைத்துள்ளது என்றே நாம் சொல்ல வேண்டும். இன்று உலகின் முடிசூடா வல்லரசாக திகழும் அமெரிக்கவின் உதவி தேவைப்படாவிட்டாலும் எமக்குச் சாதகமான கொள்கையை அதுவும் தமிழ் மக்களின் போராட்டம் மனித உரிமைப் போராட்டமே என்று அறிவித்தாலே எமது இன அழிவிற்கு ஒரு வழி பிறந்து விடும்.

இன்று உலகின் பணக்கார நாடுகள் என்று சொல்லக் கூடிய அனைத்து நாடுகளுமே பரமசிவன் கழுத்துப் பாம்பாக இருக்க ஆசைப்படுகின்றன. எண்ணைவளம் கொண்ட மத்திய கிழக்கு நாடுகள் முதலாக, ஐரோப்பிய நாடுகள் வரை அமெரிக்காவின் உதவிக்கு எதிர்பார்த்துக் கிடக்கின்றன. அதனால் தமது ஆதரவைக் கொடுக்கின்றன. எமது இனத்தின் உயிர் அழிவைத் தடுக்க வழி ஏற்படும் என்ற நிலையில் இருக்கும் போது வெண்ணை திரண்டு வரும் போது தாழி உடைத்த கதையாக இல்லாமல், அமெரிக்காவிற்கு எதிராகப் போகாமல் ஏதாதிபத்தியம் என்றெல்லாம் நாம் உளறாமல் எல்லோரையும் போன்று நாமும் அமெரிக்காவில் உண்டான அழிவிற்கு இரங்கல் கூறி. எமது சுய நலத்தை மனதில் கொண்டு பரமசிவன் கழுத்துப் பாம்பாக இருந்து நலம் நலமறிய ஆவல் என்று பாட ஆசைப்படுவதில் இன்றைய காலகட்டத்தில் தவறு ஒன்றுமில்லை.

சிந்தனை தொடரும்....

பரம். G.


ஒரு சாதாரண மனிதன்

**COMPUTER REPAIR & INSTALLATION**

* REPAIR
* SOFTWARE INSTALLATION
* SETUP HOME NETWORK
* HARDWARE INSTALLATION
(eg. sound card, network card, modem card, memory, CD Rom, hardrive, CDR-RW, and much more)
* ALL FOR A LOW PRICE

PL. CALL: (416) 265-2319





# தூறல்

## அப்பா பாஸ்

அண்மைக் காலங்களாக T.V. சீரியல்கள் திரைப்படங்களைவிட முன்னே பாய்ந்து செல்கின்றன. இவற்றிற்குப் பல காரணங்களைக் கூறலாம். தொடர்கதைகளைப் போன்று இவையும் இழுத்துச் செல்லப்படுகின்றன. பள்ளிக் காலங்களில் சாண்டில்யனின் நாவல்களை வாசித்த அனுபவம் போலவே இதுவும் மகாபாரதம், இராமாயணக் கதைகளின் மூலமே இவற்றுள்ளும் பரந்து காணப்படுகின்றன. பலவற்றின் பெயர்களும் அவ்வாறே. உதாரணமாக "கோபுரம்", "ஆலயம்", "அர்ச்சனைப் பூக்கள்", "குடும்பம்", "வாழ்க்கை", "சித்தி". பட்டுப் புடவையுடனே நித்திரைக்குப் போகும் மாயக் காட்சிகளுக்குக் குறைவில்லை. சினிமாவில் சந்தர்ப்பம் இழந்த பலர் இங்கு நடிக்கிறார்கள். T. ஜானகிராமனின் நாவலை மையமாகக் கொண்டு வெளிவந்த படமான 'மோகமுள்' இன் நாயகனாக நடித்த அபிஷேக் இன்று பல தொடர்களில் நடிக்கிறார். K.R. விஜயா, அம்பிகா, அர்ச்சனா, வினோதினி, சிவகுமார், தலைவாசல் விஜய், நிழல்கள் ரவி, C.I.D சகுந்தலா, ரேவதி, மௌனிகா எனப் பட்டியல் நீள்கிறது. இவர்களில் பெரும்பாலானோரின் நடிப்பும் அதே பாணியில் அமைந்தவையே. 20 வருடங்களுக்கு மேலாக திங்கள் தொடக்கம் வெள்ளி வரை கனேடிய, அமெரிக்கா தொலைக்காட்சிகளை அலங்கரிக்கும் Young and Restless போன்ற தொடர்கள் போல் இன்னமும் தமிழில் தொடர்கள் வராமை ஆறுதலே.



இவற்றையும் மீறி பல நல்ல தொடர்கள் வெளிவந்த வண்ணமுள்ளன. சென்ற வருடம் 'கதை நேரம்' என்னும் 30 நிமிட சிறு கதைகளை பாலுமகேந்திரா இயக்கியிருந்தார். தமிழில் குறிப்பிடத்தக்க சிறு கதைகளை மிகவும் சிறப்பாக இயக்கியிருந்தார். சமுத்திரம், சுந்தரசாமி, சுஜாதா, செ.யோகநாதன் போன்ற பலரது 52 கதைகளை சிறப்பான கதை அமைப்பின் மூலமும், சிறப்பான இயக்கத்தின் மூலமும் சிறந்த படைப்புக்களாக மாற்றியிருந்தார். சிறு கதைகளை வாசித்த அனுபவத்தைவிட, இவரது கதை நேரத்தில் அனுபவம் மிகவும் சிறப்பாக இருந்தது. ஒவ்வொரு திரைப்படக் கல்லூரி மாணவனும், திரைப்படத் தீவிர இரசிகர்கள் ஒவ்வொரு வரும் பல தடவைகள் இவற்றைப் பார்க்க வேண்டும். ஒரு சிறு கதையை எவ்வாறு இயக்குவது, எவ்வாறு திரைக் கதையை அமைப்பது என்பதை இவரிடம் கற்க வேண்டும். அவற்றிற்கு ஒரு சிறந்த உதாரணமே கதை நேரம்.

இவரைத் தொடர்ந்து K. பாலச்சந்தர் சின்னத்திரை என்னும் பெயரில் சிறு கதைகளை தொலைக்காட்சி தொடர்களாக தயாரித்தார். K. பாலச்சந்தர் அவ்வப் போது கடும் விமர்சனத்துக்குள்ளானவர். நடுத்தர வர்க்கத்தை அவர்களது பலவீனம் மூலமே தமது பக்கம் இழுத்து கனவு காண வைத்தவர். இவர் தயாரித்த தொடர்களும் இராமாயாணம், மகாபாரதத்தின் தழுவல்களே. ஆனால் காலப் போக்கில் புதிய இளைஞர்களிடம் தமது தயாரிப்புகளுக்கான நெறியாள்கையை கையளித்தனர். கைமேல் பலன் என்றுதான் கூறலாம். மரபை உடைத்து பல நல்ல படைப்புக்களை ஜெயகாந்தனின் 'மௌனம் ஒரு பாஷை' பின்னர் 'கவிதை மனசு', 'துருப்பிடித்த மனசு' எனத் தொடர்கிறது. "ஒரு மகள் மனைவியாகிறாள்" என்ற தொடரில் "நேசம்" என்னும் அமைப்புப் பற்றிக் காட்டப்படுகிறது. தற்கொலை செய்ய முயல்பவர்கள் மன அழுத்தத்தால் பாதிக்கப்படுவர்கள் இந்த அமைப்புடன் தொடர்பு கொண்டு பேசினால் அவர்கள் இவர்களை ஆறுதல்ப்படுத்துவதுடன் உதவியும் புரிவார்கள். இவ்வாறான ஓர் அமைப்பு கனடாவிலும் 24 மணி நேரமும் இயங்குகிறது. Distress Centre என்னும் அமைப்பே அது. பல தற்கொலையாளிகள் இந்த அமைப்பின் உதவி பெற்று குணமடைந்துள்ளார்கள். இவ்வாறு பல நல்ல விடயங்களும் இத்தொடர்களில் காட்டப்படுகின்றன. அண்மையில் வெளிவந்த "அப்பா பாஸ்" என்னும் தொடர் பல மரபுகளை உடைத்து சாதனை புரிந்துள்ளது.

தாயால் வளர்க்கப்படும் பிள்ளைகள்: தந்தையை அறிமுகப்படுத்துவதே தாய்தான். அவ்வப் போது வந்து போகும் தந்தை. வேலை நிமித்தம் வெளியே செல்வதால் பிள்ளைகளைப் பற்றி அறிந்திராத தந்தை. தீடிரென தாய் இறந்து விடுகிறாள். மூன்று பெண்கள். மூத்தவள் கல்லூரிக்குச் செல்பவள், இளையவள் பாடசாலை, மூன்றாவது சிறிய பெண். தந்தையுடன் ஒட்ட முடியாமல் தவிக்கும் பிள்ளைகள். இதற்கு தீர்வாக தமது பழைய கிராமத்தை நோக்கிச் செல்கிறார்கள். அங்கே தாய் அறிமுகப்படுத்திய தந்தையைத் தேடுகிறார்கள். தாயால் ஒரு Hero ஆக அறிமுகப்படுத்திய தந்தை. அந்த Hero தனத்தைக் காட்ட முடியாமல் வெறும் சராசரி ஆண் தான் என்பதை வெளிக்காட்டுகிறார்.









முதலில் தாயும் தந்தையும் காதலிக்கும் கட்டத்தில் ஆண் பேசுகிறார். அங்கே காட்சிகளாக பதிகிறது. பெண்ணின் குரலில் ஆணின் காட்சிகளிலேயே பதிவாகிறது. மிகவும் சிறப்பான முயற்சி. பயணத்தின் போது இடையில் ஏற்படும் சிக்கல்கள் அதன் மூலம் தமது தந்தையை தேடிய பிள்ளைகள். காதலனை அறிமுகப்படுத்தும் போது ஏற்படும் மன மாற்றங்கள். எந்தவித இழப்புமின்றி அழுத்தமாகக் கதை செல்கிறது.

ஒரு திரைப்படமாக வரவேண்டிய இந்த படைப்பு பாலுமகேந்திராவின் கதை நேரத்தின் பின்னர் வந்த சிறந்த படைப்பு என்று கூறலாம். எங்களில் ஏற்படும் பிரதிவிம்பங்களை நாங்கள் கனவுமயமாக்கி மனதில் பதித்துக் கொள்கிறோம். அவற்றை நாங்கள் நேரில், உண்மையாகத் தரிசிக்கும் பொழுது எங்களது மனதிலுள்ள பிம்பங்களுடன் ஒப்பிடுகிறோம். ஒப்பீடு மிகவும் சிறப்பாக இருந்தால் வெற்றி, இல்லையேல் மனமுடைவுடன், கோபமும் ஏற்படுகிறது.

இவ்வாறான சம்பவமே அப்பா பாஸிலும் ஏற்படுகிறது. இறுதியில் அப்பா தனது குடும்பத்துடன் ஒட்டிக் கொண்டாலும் என்னைப் பொறுத்த வரை அங்கே அப்பா என்ற பாத்திரம் உடைக்கப்பட்டுவிட்டது. அதுவே இயக்குனரின் வெற்றியுமாகும். நான் பார்த்த வீடியோப் பிரதியில் இயக்குனரின் பெயர் தெளிவாக இல்லை. ஆனால் இந்த புதியவரது முயற்சிகள் தொடர வேண்டும். -வானரன்-



# அன்புத் தமிழ்

- கவிஞர் வி. கந்தவனம்

## இரு நோக்கு

அவளின் அழகு சொல்லி முடியாது. முகத்தை முழுமதி என்பார். கண்களைக் கயல்கள் என்பார். புருவங்களை விற்கள் என்பார்.

அவள் சிரித்தால் செந்தாமரை அழுமாம், தன்னிலும் அவளின் பொலிவு சிறப்பாக இருக்கின்றது என்று. பற்களைப் பார்த்து முத்துக்கள் வெள்குமாம், தம்மிலும் அவளது பற்கள் அழகாக இருக்கின்றன என்று. இதழ்களைக் கண்டு கொவ்வைக் கனிகள் வெம்புமாம், அவற்றின் அளவும் நெகிழ்ச்சியும் திரட்சியும் குளிர்ச்சியும் தமக்கு இல்லையே என்று.

ல் ஒரு கொடி என்பார். இடை ஒரு மின்னல் என்பார். பார்த்தாள் எனின் மானை வரவழைப்பார். பேசினால் கிளிப்பிள்ளை தோற்குமென்பார். நடந்தாலோ அன்னத்தை ஒப்பிடுவார்.

உடல் அழகு நிலையற்றது. காலத்தால் கரைய வல்லது. புறத்து அழகை அணி செய்வது அகத்து அழகு. அவளது உள்ளம் தூய்மையானது. ஒழுக்கம் சிறப்பானது. அவளை வட்டமிட்ட வாலிபர்களுக்கு எட்டாக் கனியாகவே அவள் பவனி வந்தாள். அத்தகைய அன்னக் கிளி, அந்த ஊரின் தேவகன்னி ஒரு நாள் அவனைக் காண நேர்ந்தது.



அவனின் அறிவுத் திறம், தொழில் மேன்மை, உயர்ந்த குணம், ஒழுக்க விழுப்பம் முதலியன பற்றியும் விளையாட்டுத் துறைச் சாதனைகள் பற்றியும் ஏழைகளுக்குச் செய்யும் உதவிகள் பற்றியும், ஊர் வளர்ச்சிக்கு ஆற்றிவரும் தொண்டுகள் பற்றியும் அவள் நிறையவே கேள்விபட்டிருக்கிறாள்.

ால் அவனின் சிவந்த நிறத்தை, உயர்ந்த தோற்றத்தை, அகன்ற மார்பை, நிமிர்ந்த நடையை, நேர்க்கொண்ட பார்வையை அவள் இதற்கு முன் பார்த்ததில்லை. இன்று பார்க்கின்றான்; பார்த்துப் பருகின்றான். அந்தக் கட்டிளங் காளையின் அற்புத அழகு அவள் உள்ளத்தைக் குற்றாலம் ஆக்கியது.

அவனும் நோக்கினான். கண்கள் ஒருகணம் சந்தித்தன. அந்த ஒரு கணத்துள் ஓராயிரம் செய்திகள் பரிமாறப்பட்டிருத்தல் வேண்டும்.

மறுகணம் எதனையோ புரிந்து கொண்டவைபோல அவள் கண்கள் நிலம் நோக்கின. இதழ்கள் முறுவலித்தன. வலதுகாற் பெருவிரல் அவளின் பூரிப்பை நிலமகளுக்கு நேர்முக வருணை செய்து கொண்டிருந்தது. அவள் பூத்துக் குலுங்கினாள். அவன் பார்த்து மயங்கினான்.

**கண்ணொடு கண்ணினை நோக்கின் வாய்ச்சொற்கள்**
**என்ன பயனும் இல** (குறள்:- 110:10)

என்னும் வள்ளுவனாரின் வாய்மொழி காட்சியாகிக் கொண்டிருந்த அந்த வேளையிலே அவன் நெஞ்சத்து ஒலி நாடாவை அவள் முடுக்கிவிட்டுக் கொண்டிருந்தாள்.

இவள் மண்ணகப் பெண்ணோ அன்றி வானகப் பெண்ணோ? தேவலோகத்திலிருந்து என்னைத் தாக்குதற் பொருட்டுப் பெரும் சேனையுடன் வந்தவளையொத்த இந்த அழகி யார்? இயமனை யான் ர்பு கண்டறியேன். இன்று கண்டு கொண்டேன். அவன் போர் செய்யும் கண்களையுடையவன்.... இல்லை உடையவள்! பெண்மானைப் போன்று அச்சங் கொள்ளும் பார்வையும் நாணத்தையும் இயல்பாகவே கொண்டுள்ள இவளுக்கு வேறு அணிகலன்கள் வேண்டியதில்லை.

இப்பொழுது இவள் தலைநிமிர்கிறது. நான் பார்க்கும் போது தலை குனிந்தவள் நான் பார்க்காத போது என்னைப் பார்க்க விரும்புகிறாள் அவ்வளவு நாணம் இவளுக்கு. புன்முறுவல் பூக்கின்றாளே! அந்த முறுவலில் ஒரு குறிப்பு இருக்கவே செய்கின்றது. ஆம், இவள் என்னை விரும்புகிறாள் எனது விருப்பத்தை இவளுக்கு எவ்விதம் தெரிவிப்பது? இவளது சிறு பார்வை எனது விருப்பித்திலும் பெரியது. இவள் என்னை அன்புடன் பார்த்துத் தலை குனிந்த செயல், எமது அன்பாகிய பயிரை வளர்ப்பதற்குப் பாய்ச்சிய நீர் எனின் முற்றிலும் தகும்.




பூட்டு? சாவி?

KEERTH LOGSMITH

வீடு-வியாபாரம்-தொழிலகம்

வீட்டு திறப்புகள் தொலைந்து விட்டதா?
மாற்ற வேண்டுமா? மற்றும் உங்களது
சகலவித திறப்பு சம்பந்தமான
பிரச்சினைகளிற்கு தீர்வு காண நினைவில்
வைத்திருக்க வேண்டிய தொலைபேசி இலக்கம்

416-439-3709 Pager: 375-7330

Safety Truck

Training School Ltd.

